# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

## S.C. NO. 127/2020

## PW 7

| | | |
|---|---|---|
| Name | : | **ஜெகதீசன்** |
| Father's/Husband's Name | : | **நாராயணசாமி** |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.02.2025.

**Accused A1 - 7 present.**

**முதல் விசாரணை -**

(1) நான் தற்போது கீழ்பென்னாத்துார் வட்டம், சிறுநாத்துார் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். 2017 ல் சாணிப்பூண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். கடந்த 08.12.2017 ம் தேதியன்று வேட்டவலம் ஆய்வாளர் காலை 6.00 மணிக்கு போன் செய்து என்னை சாணிப்பூண்டி கூட்ரோட்டிற்கு வர சொன்னார். நானும் என் உதவியாளரும் காலை 6.30 மணிக்கு சென்றோம். அங்கு ஆய்வாளருடன் 4 போலீசாரும், ஆஜர் எதிரிகளில் ஜெயராமன், குமரவேல், கார்த்திக், முனுசாமி ஆகியோர்கள் இருந்தார்கள். எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் அவர்களை விசாரித்தார். அப்போது எதிரிகள் எவ்வித வற்புறுத்தலும் இன்றி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலங்களை கொடுத்தார்கள். அதில் ஜெயராமன் முதலிலும், இரண்டாவது குமரவேலும், 3 வது கார்த்திக்கும், 4 வதாக முனுசாமியும் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். ஜெயராமன் தன்னை அழைத்து சென்றால் செல்லங்குப்பம் கிராமத்தில் செல்லியம்மன் கோயில் பக்கத்தில் உள்ள முட்புதரில் குற்ற

செயலுக்கு பயன்படுத்திய கறி அறுக்கும் கத்தியை எடுத்து ஆஜர்படுத்துவதாக சொன்னார். **அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6**. அதன்பின்னர் எதிரி குமரவேல் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். குமரவேல் தன்னை அழைத்து சென்றால் செல்லங்குப்பம் கிராமத்தில் ஏரிக்கரை பக்கத்தில் உள்ள ஆலமரம் பக்கத்தில் உள்ள முட்புதரில் குற்ற செயலுக்கு பயன்படுத்திய குத்து கத்தியை எடுத்து ஆஜர்படுத்துவதாக சொன்னார். **அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அதன்பின்னர் எதிரி கார்த்திக் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் என்னை அழைத்து சென்றால் செல்லங்குப்பம் விஸ்வநாதன் நிலத்திற்கு பக்கத்தில் உள்ள ஒரு முட்புதரில் குற்ற செயலுக்கு பயன்படுத்திய வெட்டு கத்தியை ஆஜர்படுத்துவதாக சொன்னார். **அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அதன்பின்னர் எதிரி முனுசாமி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் என்னை அழைத்து சென்றால் செல்லங்குப்பம் இரயில்வே கேட் அருகில் உள்ள முட்புதரில் இருந்து வெட்டுக்கத்தியை எடுத்து ஆஜர்படுத்துவதாக சொன்னார். **அந்த அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும்,என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம்.

(2) அதன்பின்னர் ஜெயராமன் எங்களை செல்லங்குப்பம் கிராமத்தில் செல்லியம்மன் கோயில் பக்கத்தில் உள்ள முட்புதருக்கு அருகே அழைத்து சென்று கறி அறுக்கும் கத்தியை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த மகஜர் அ.சா.ஆ.10. தற்போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் கொடுவா கத்தி தான் ஜெயராமன் ஆஜர்படுத்தியது. அது அ.சா.பொ.1.**

(3)அதன்பின்னர் குமரவேல் எங்களை செல்லங்குப்பம் கிராமத்தில் ஏரிக்கரை பக்கத்தில் உள்ள ஆலமரத்திற்கு அருகேயுள்ள முட்புதரின் அருகே அழைத்து சென்று குத்துக் கத்தியை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த மகஜர் அ.சா.ஆ.11. தற்போது நீதிமன்றத்தில் உள்ள கத்திகளின் நடுவே உள்ள குத்துக்கத்தி தான் அது. அது அ.சா.பொ.2.**

(4)அதன்பின்னர் எதிரி கார்த்திக் எங்களை செல்லங்குப்பம் கிராமத்தில் விஸ்வநாதன் நிலத்திற்கு பக்கத்தில் உள்ள முட்புதரின் அருகே அழைத்து சென்று வெட்டுக் கத்தியை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த மகஜர் அ.சா.ஆ.12. தற்போது நீதிமன்றத்தில் உள்ள இரும்பு பிடி போட்ட வெட்டுக்கத்தி தான் அது. அது அ.சா.பொ.3.**

(5) அதன்பின்னர் எதிரி முனுசாமி எங்களை செல்லங்குப்பம் கிராமத்தில் இரயில்வே ரோடு பக்கத்தில் உள்ள முட்புதரின் அருகே அழைத்து சென்று குத்துக் கத்தியை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும் என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். **அந்த மகஜர் அ.சா.ஆ.13**. தற்போது நீதிமன்றத்தில் உள்ள மரப்பிடி போட்ட குத்துக்கத்தி தான் அது. **அது அ.சா.பொ.4.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** –

(1) என் சொந்த ஊர் வழுதலங்குணமாகும். நான் செல்லங்குப்பம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக சம்பவத்திற்கு முன்போ, பின்போ பணிபுரிந்ததில்லை. ஆய்வாளர் என்னை அழைத்தபோது நான் வழுதலங்குணம் கிராமத்தில் தான் குடியிருந்து வந்தேன். ஆய்வாளர் எனக்கு போன் செய்தபோது விடியற்காலை 5.45 மணியிருக்கும். ஆய்வாளர் அழைத்தபோது நான் முதன்முதலில் சாணிப்பூண்டி கிராமத்திற்கு வந்தேன். நான் வந்தபோது ஆய்வாளருடன் 4 எதிரிகளும் இருந்தார்கள். அப்போது அங்கிருந்த எதிரிகளை அடையாளம் காட்ட முடியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. சாணிப்பூண்டி கூட்ரோட்டில் ஆய்வாள் இருந்த இடத்தில் டீக்கடை மற்றும் ஒட்டல் ஆகியவை இருந்தது என்றால் சரிதான். அங்கு பொதுமக்கள் 10 நபர்கள் இருந்திருப்பார்கள். நான் சாணிப்பூண்டி கூட்ரோட்டிற்கு சென்றபோது காலை 6.30 மணியிருக்கும். அங்கு 3 மணி நேரம் கழித்து தான் செல்லங்குப்பம் கிராமத்திற்கு சென்றோம். நாங்கள் சென்றபோது ஊர்க்காரர்கள் அங்கிருந்தார்கள். எதிரிகள் வழக்கு சொத்துக்களை எடுத்துக்கொடுத்த போது நான் ஆய்வாளருடன் இருந்தேனா என்றால் நானும் அவர்களுடன் இருந்தேன். எனக்கு சென்டிமீட்டர், அடி போன்ற அளவுகோல்கள் தெரியும். 3 அங்குலம் சுமாராக 10 சென்டிமீட்டர் என்றால் சரிதான். 5 அங்குலம் சுமாராக 17 சென்டிமீட்டர் என்றால் எனக்கு தெரியாது. 9 அங்குலம் முக்கால் அடி என்றால் எனக்கு தெரியாது. கிராமத்தில் உள்ள நில அளவைக்கு நான் சென்று வருவேன்.

(2) தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 3 கத்திகளில் ஒரு அடி கத்திகள் என்றால் சரிதான். மகஜர்களில் ஒன்றாக போலீசார் கையொப்பம் பெற்றார்களா என்றால் தனித்தனியாக எழுதி வாங்கினார்கள். நான் அவற்றை படித்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சா.பொ.2 மற்றும் 4 கத்திகள் எந்த எதிரிகள் எடுத்துக்கொடுத்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. நான் சொல்வதுபோல் என் முன்னிலையில் எதிரிகள் எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், எந்தவொரு வழக்குச் சொத்தும் கைப்பற்றவில்லை என்றும், நான் போலீசாருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சான்று பொருட்களும், ஆவணங்களும் போலீசாரால் தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் ஆவணங்களை படித்து பார்க்காமல் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.